DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

CC.No.409/2024

Deposition of Witness : Additional witness/PW7

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. கலியமூர்த்தி, சிறப்பு உதவி ஆய்வாளர் | Taluk | |
| Father's Name | சின்னதம்பி | Village | |
| Age | 57 | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **25.03.2026.** | | | |

(Accused 1 present, A2 to A5 absent. U/s.317 PFA)

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை:</u>**

**1.** நான் தற்போது முத்தாண்டிக்குப்பம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். இவ்வழக்கில் புகார் வாக்குமூலம் பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் திருஞானம் மற்றும் இவ்வழக்கில் புலன் விசாரணை மேற்கொண்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்த உதவி ஆய்வாளர் வேல்முருகன் ஆகியோர்களின் கையொப்பம் மற்றும் கையெழுத்து எனக்கு நன்கு பரிட்சையம் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. சிறப்பு உதவி ஆய்வாளர் திருஞானம் முத்தாண்டிக்குப்பம் காவல் நிலையத்தில் கடந்த 01.05.2024 அன்று நிலைய பொறுப்பில் இருந்தபோது, பண்ருட்டி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலை பெற்று, மேற்படி மருத்துவமனைக்கு சென்று, விசாரித்தபோது, வழக்கு சம்பவத்தில் காயம்பட்ட வைத்தியலிங்கம் மகன் இராஜலிங்கம் என்பவர் மேல்சிகிச்சைக்காக கடலூர் அரசு மருத்துவமனைக்கு சென்றிருப்பதாக தகவல் பெற்று, மேற்படி மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த மேற்சொன்ன இராஜலிங்கம் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று, நிலையம் வந்து, புகார் வாக்குமூல அடிப்படையில் நிலைய குற்ற எண்.101/2024 இ.த.ச. பிரிவுகள் 147, 294(b), 323, 506(ii)-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, அதனுடன் அசல் புகார் வாக்குமூலத்தையும் இணைத்து சமூகம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்து, புலன் விசாரணைக்காக வழக்கு கோப்பினை உதவி ஆய்வாளர் வேல்முருகன் அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார். **(மேற்படி புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ-2 மற்றும் அ.சா.ஆ-3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. பின்னிட்டு, உதவி ஆய்வாளர் வேல்முருகன் வழக்கு கோப்பினை பார்வையிட்டு, தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, 01.05.2024

அன்று சுமார் 14.00 மணியளவில் சம்பவயிடம் சென்று, சாட்சிகள் சத்தியராஜ், பிரசாந்த் ஆகியோர்கள் முன்பு சம்பவயிடத்தை பார்வையிட்டு, மாதிரி வரைபடம் வரைந்து, பார்வை மகசர் தயார் செய்து, பார்வை மகசரில் மேற்சொன்ன சாட்சிகளிடம் சாட்சி கையொப்பம் பெற்று, அவர்களை விசாரணை செய்து, தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(மேற்படி மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் முறையே அ.சா.ஆ–4 மற்றும் அ.சா.ஆ–5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மேலும், இவ்வழக்கின் புகார்தாரரும், காயம்பட்ட நபருமான ராஜலிங்கம் என்பவரையும், கண்ணுற்ற சாட்சிகள் சிவபாலன், சுப்ரமணியன், வீரசெல்வன் ஆகியோர்களையும், சாட்சிகள் வைத்தியலிங்கம், ஆனந்தன், மணிசேகர் ஆகியோர்களையும், 01.05.2024 அன்று விசாரணை செய்து, தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

4. மேற்படி சாட்சிகளின் விசாரணையிலிருந்து வழக்கு சம்பவம் உண்மையென தெரியவந்ததில், வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளான அருள்முருகன், ஜெயக்குமார், குமார், ஜெகநாதன், மணிகண்டன் ஆகியோர்களை தேடியதில் எதிரிகள் அருள்முருகன், ஜெயக்குமார் ஆகியோர்கள் மேன்மைமிகு கடலூர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் Crl.M.P.No.3219/2024 நாள்.24.05.2024 அன்று முன்ஜாமின் பெற்றிருந்ததால் உதவி ஆய்வாளர் அவர்களை கைது செய்யவில்லை. மற்ற எதிரிகளான குமார், ஜெகநாதன், மணிகண்டன் ஆகியோர்கள் கடந்த 02.05.2024 அன்று சுமார் 11.00 மணியளவில் வல்லம் சுடுகாடு அருகே இருந்தவர்களை உதவி ஆய்வாளர் அடையாளம் கண்டு, காரணம் கூறி கைது செய்து, நிலையம் கொண்டு வந்து திரேக சோதனை செய்து, பாராவசம் ஒப்படைத்து, தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார்.

5. வழக்கு சம்பவத்தில் காயம்பட்ட ராஜலிங்கம் என்பவருக்கு சிகிச்சை அளித்த பண்ருட்டி அரசு மருத்துவமனை மருத்துவர் சரண்யா என்பவரை 14.05.2024 அன்று விசாரணை செய்து, மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று வழங்கிய காயச்சான்றை பெற்று, வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(மேற்படி விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ–6ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மேற்படி ராஜலிங்கத்துக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என மருத்துவர் வழங்கிய காயச்சான்றின் அடிப்படையில் வழக்கின் சட்டப் பிரிவுகளை இ.த.ச. பிரிவுகள் 147, 294(b), 323, 506(ii)–லிருந்து இ.த.ச. பிரிவுகள் 147, 294(b), 323, 325, 506(ii)–ஆக பிரிவு மாற்றம் செய்து, கடந்த 14.05.2024 அன்று பிரிவு மாற்று அறிக்கை தயார் செய்துள்ளார். **மேற்படி பிரிவு மாற்று அறிக்கை அ.சா.ஆ–7ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேலும், மேற்சொன்ன சிறப்பு உதவி ஆய்வாளர் திருஞானத்தை கடந்த 14.05.2024 அன்று விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

6. இத்துடன் உதவி ஆய்வாளர் வழக்கின் புலன் விசாரணையை முடித்து 1வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 147, 294(b), 323, 325, 506(ii) ன்படியும், 2வது 3வது,

4வது மற்றும் 5வது எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 147, 294(b), 323, 506(ii) ன்படியும், கடந்த 27.05.2024 அன்று இறுதி அறிக்கை தயார் செய்து, சமூகம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மேற்சொன்ன உதவி ஆய்வாளர் விசாரணையில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலானவர்கள் அவர்களது கு.வி.மு.ச பிரிவு 161(3) வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதுபோல் சொல்லியுள்ளார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

அ.சா.1 கொடுத்த தவறான புகாரை பெற்று சம்பவ இடம் செல்லாமலும், சாட்சிகளை விசாரிக்காமலும் தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கின் அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டன என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும், ஆஜரில்லா எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

CC.No.409/2024

Deposition of Witness : LW2/PW5

| | | | |
|---|---|---|---|
| Name | சிவபாலன் | Taluk | |
| Father's Name | இராஜேந்திரன் | Village | |
| Age | 37 | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **25.03.2026.** | | | |

(Accused 1 present, A2 to A5 absent. U/s.317 PFA)

சாட்சியை முத்தாண்டிக்குப்பம் காவல் நிலைய காவலர் திருமதி. ராஜலட்சுமி HC 1949அவர்கள் அடையாளம் காட்டினார்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது பேர்பெரியான்குப்பத்தில் வசித்து வருகிறேன். தற்போது ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். அ.சா–1 ராஜலிங்கம், அ.சா–2 வீரசெல்வன், அ.சா–3 வைத்தியலிங்கம், பட்டியல் சாட்சிகள் சுப்ரமணியன், ஆனந்தன், மணிசேகர், ஆகியோர்களையும், ஆஜர் எதிரியையும், ஆஜரில்லா எதிரிகளையும் தெரியும். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எந்த விபரமும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

வழக்கின் எதிரிகள் பழக்கமானவர்கள் என்று சொன்னால் சரிதான். போலிசார் விசாரித்தார்கள் என்றும், போலிஸ் விசாரணையில் கடந்த 30.04.2024 அன்று இரவு சுமார் 9.15 மணியளவில் வல்லம் ஏரிக்கரையில் உள்ள எனது அக்கா வீட்டிற்கு சென்றுகொண்டிருந்தபோது, மேற்படி ஏரிக்கரை அருகே காலனி செல்லும் வழியில் உள்ள ஒரு மாமரத்தின் அருகே எங்கள் ஊரைச் சேர்ந்த இராஜலிங்கம் என்பவரை, எதிரிகள் அருள்முருகனும், ஜெயக்குமாரும் இருசக்கர வாகனத்தில் வந்து இறக்கினார்கள் என்றும், பின்னிட்டு பெயர், விலாசம் கேட்டுத்தெரிந்த குமார், ஜெகநாதன், மணிகண்டன் ஆகியோர்கள் இருசக்கர வாகனத்தில் வந்து இறங்கினார்கள் என்றும், எதிரி அருள்முருகன், இராஜலிங்கத்தை அசிங்கமாக திட்டி, கையால் முகத்தில் மாறி மாறி குத்தினார்கள் என்றும், எதிரிகள் ஜெயக்குமார், குமார், ஜெகநாதன், மணிகண்டன் ஆகியோர்கள் சேர்ந்து இராஜலிங்கத்தை அசிங்கமாக திட்டி, கையால் அடித்தும், காலால் உதைத்தும், அவரது காலை பிடித்து தரையில் இழுத்து, இராஜலிங்கத்தை அவர்கள் இருசக்கர வாகனத்தில் ஏற்றிக்கொண்டு சென்றார்கள் என்று சொன்னால் சரியல்ல. மேலும், பின்னிட்டு, ராஜலிங்கத்தை

பேர்பெரியான்குப்பம், ஜெயசித்ரா பெட்ரோல் பங்க் அருகே இரங்கநாதன் என்பவரது முந்திரி தோப்பு அருகே அவரை வண்டியுடன் போட்டுவிட்டு, அவரை அசிங்கமாக திட்டி, கையால் அடித்தும், காலால் உதைத்தும், கட்டையை காட்டி கொலைமிரட்டல் விடுத்து சென்றதாகவும், மேற்படி தகவல் தெரிந்து, அவரது அப்பா, தம்பி ஆனந்தன் மற்றும் அவரது சித்தப்பா மகன் மணிசேகரன் ஆகியோர்கள் வந்து இராஜலிங்கத்தை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றதாக கேள்விப்பட்டேன் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு சொல்லிவிட்டு தற்போது வழக்கின் எதிரிகள் எனக்கு பழக்கமானவர்கள் என்பதால், அவர்களை வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக அரசு தரப்பிலிருந்து விலகி பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை– இல்லை.**

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

CC.No.409/2024

Deposition of Witness : LW9/PW6

| Name | பிரசாந்த் | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | முருகன் | Village | |
| Age | 29 | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **25.03.2026.** | | | |

(Accused 1 present, A2 to A5 absent. U/s.317 PFA)

சாட்சியை முத்தாண்டிக்குப்பம் காவல் நிலைய காவலர் திருமதி. ராஜலட்சுமி HC 1949அவர்கள் அடையாளம் காட்டினார்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது பேர்பெரியான்குப்பத்தில் வசித்து வருகிறேன். தற்போது கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா–4 சத்தியராஜ் என்பவரை தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் என் கையொப்பம் இல்லை. அதில் உள்ள சாட்சி கையொப்பங்கள் யாருடையது என்று எனக்கு தெரியாது. இவ்வழக்கு சம்மந்தமாகவும், பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் ஆவணம் சம்மந்தமாகவும் எந்த விவரமும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

1. வழக்கின் எதிரிகள் எனக்கு பழக்கமானவர்கள் என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் நான் போலிசார் விசாரணையின்போது 01.05.2024 அன்று சுமார் 14.00 மணியளவில் முத்தாண்டிக்குப்பம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் என் முன்பும், சத்தியராஜ் முன்பும் இவ்வழக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரிவரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்தார்கள் என்றும், மேற்படி பார்வை மகசரில் நாங்கள் இருவரும் சாட்சி கையொப்பங்கள் செய்தோம் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு சொல்லிவிட்டு வழக்கின் எதிரிகள் பழக்கமானவர்கள் என்பதால், அவர்களை வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக அரசு தரப்பிலிருந்து விலகி பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை– இல்லை.**